**IMTC UK**

**Date: Aug. 25, 2024**

# Meeting Minutes

- IMTCUK Governing Board - Proposal Approval.

- கனடா ஜெர்மனி உடன் கலந்து பேசிய போது கவுன்சில் ஒன்று அமைத்து, எக்ஸிக்யூடிவ் போர்டு ஒன்றும் அமைத்தால் கம்யூனிகேஷன் மற்றும் அட்மினிஸ்ட்ரேஷனுக்கு வசதியாக இருக்கும் என்று தீர்மானித்தல்.

- மலேசியாவில் இருக்கும் சண்முகம் என்பவரிடம் பேசியபோது டிசம்பர் மாதம் டைமண்ட் ஜூப்ளி ஒன்று நடத்த வேண்டும் என்றார், அதை பற்றி தீர்மானித்தல்.

- சவுத் ஆப்பிரிக்கா மற்றும் மலேசியா ஐ எம் டி சி இணைந்து UNITED GLOBAL ஆக பணியாற்ற வேண்டும் என்று தீர்மானித்தல்.

- UK வில் இருந்து செழியன், முருகேசன் தங்கராசா, கனடாவில் துரைராஜா, ஜெர்மனியில் ராஜசூர்யன், இந்தியாவில் டாக்டர் லட்சுமி மோகன் அவர்களும் கவுன்சிலில் நியமித்தும் . Executive Board ல் மலேசியாவில் Vice Patron ஆக Mrs. ராமநாயகம், Mrs. பொன்னி வீரப்பன் அவர்களை நியமித்தும், President UK & கனடா லிங்க் பண்ணுவதற்கு ஸ்ரீ நாராயணா தாஸ் நியமித்து, UK President ஆக Dr. பூலோகநாதன் மற்றும் விமல தாசன் அவர்களை நியமித்தும், ஐரோப்பியன் president ஆக மைக்கேல் காலின்ஸ், Vice President ஆக Dr ராஜன் கைலைநாதன், ஐரோப்பியன் Vice President ஆக சுமதி லக்ஷ்மன், அண்ணாமலை பாஸ்கர், France மற்றும் பீனிக்ஸ் குமார், நார்வே, General Secretary ஆக துரை கணேசலிங்கம், Joint Secretary ஆக கோபாலகிருஷ்ணன், மலேஷியா, மற்றும் Mrs நிலா பாலசுப்ரமணியம், Treasurer ஆக T கணேசன், பிரபாவையும் நியமித்து, Legal Advisors ஆக ஜட்ஜ் ஆதம் வைத்தியலிங்கம், King Council, General Advisors Prof .மங்களேஸ்வரன், Prof கணேஷ் ராஜாவையும் நியமித்து, Media & Publication க்கு கனடா லோகேந்திர லிங்கம், ஸ்ரீ சுந்தர ராய், SK ராஜன், பிரான்ஸ் , Communication Directors ஆக Dr கிறிஸ்டி ஜெயகாந்தன், ஆலன் அருளானந்தன், பிரான்ஸ், coordination Event conference க்கு மலேஷியா குமரன் ராமசாமியும், Dr கமலா முருகனும், Asian Directors க்கு, Dr இளமதி ஜானகிராமனும், Dr முருகேஷ் தயாநிதி, ஸ்ரீ லங்கா, Dr லட்சுமியும், சதீஷ்குமார், Canada & USA க்கு சிவா கணாதிப்பிள்ளையும், Prof பாலசுந்தரம் பிள்ளையும், நிமால் விநாயகமூர்த்தியும், European Directors க்கு பாலாஜி ராஜா, Norway, துரை கந்தசாமி, France , Mrs.காலின்ஸ், France, UAE Directors க்கு ரமேஷ் விஸ்வநாதனும், மகேசும், Africa Directors க்கு ஆறுமுகம் பரசுராம், பொன்னம்பலம், & கார்த்திக், Union Ireland Directors க்கு Prof யோகா செழியன் மற்றும்

Committee members ரெஜி, Dr புவினாதன், Dr மாவேநிதி, தாமரை ஸ்ரீனிவாசன், வரதன் , Dr கமலா, ஆஸ்டன், மோகன், Australia president ஆக Dr நித்தி கண்ணாயிரம் நியமிப்பது. இந்த லிஸ்ட் imtcuk இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய தீர்மானம்.

- 2025, உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு கனடாவில் நடத்துவதற்கு அறிவித்தல்.
- ஜூன் 2026, தமிழ் ஆராய்ச்சி பண்பாடு மாநாடு ஆக்ஸ்போர்ட் வரலாற்று மையத்தில் நடத்துவதற்கு ஆயத்தங்கள் செய்வதற்கு தீர்மானம் அறிவித்தல்.
- ஜெர்மன் , சுவிஸ், லண்டன், பிரான்ஸ்,பதிவு செய்யப்பட்ட கிளைகளை எல்லாம் ஒன்றாக சேர்த்து துரை கணேசலிங்கம், ராஜா சூர்யா, மைக்கேல் காலின்ஸ், தலைமையின் கீழ் ஐரோப்பியா தமிழ் பண்பாட்டு இயக்கம் உருவாக்குவதற்கு அங்கீகாரம் & தீர்மானம் அறிவித்தல்.
- 25.8.2024 அறிவித்த உறுப்பினர்களை அங்கீகரிக்க ஒப்புதல்.
- உலக தமிழ் பண்பாட்டு இயக்கம் என்ற பெயரில் வேறு கிளைகள் அறிவிக்கப்படாமல் இயங்கி கொண்டிருந்தால் அவர்களுக்கு கடிதம் எழுதி வெளியேற்றுவதற்கு ஒப்புதல்.
- மாண்புமிகு சண்முகம் , மலேஷியாவில் உலக தமிழ் பண்பாட்டு இயக்கம் ஒன்றை உருவாக்கி நடத்திக் கொண்டிருப்பதையும், தென் ஆப்பிரிக்காவில் நிக்கி ரெட்டி இயக்கத்தையும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு ஒப்புதல். டிசம்பர் மாதம் 50வது கோல்டன் ஜூப்ளி விழா வைப்பதற்கு ஒப்புதல்.
- கனடாவில் மூன்று வருடம் நடத்தாமல் இருந்து, இப்போது ஸ்ரீ நாராயண தாஸ் தலைமையில் நடத்த ஒப்புதல்.
- உலக தமிழ் பண்பாட்டு இயக்கம் சார்பாக, உலகளாவிய தமிழ் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு அலுவர்களாக Dr பூலோகநாதனை நியமித்தது. உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சில கோட்பாடுகளை தடை செய்வது - , உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பெயரை தவறாக பயன்படுத்துவது, அரசியல் லாபத்திற்காக IMTC யை பாவிப்பது, போலியான IMTC மூலம் உறுப்பினர்களை சேர்த்து ஏமாற்றுவது, இயக்கத்தின் பதிவை வெளிநாடுகளில் மேற்கொள்வது, உறுப்பினர்களை தவறாக வழி நடத்துவதற்கு இணைய தளங்களை தொடங்குவது, வெளிநாடுகளில் இயக்கத்தின் பெயரை துஷ்பிரயோகம் செய்வது போன்றவற்றை தடை செய்வதற்கு ஒப்புதல் அளிப்பது. 2017 ஆகஸ்ட் மாதத்தில் நிதி துஷ்பிரயோகம் என்ற குற்றச்சாற்று புகார் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தது, ஜூன் மாதம் 26ம் தேதி மட்டக்கிளப்பு, யாழ்ப்பாணத்தில், ஒரு புகார்

வந்ததையும் கேட்டு விசாரித்ததில் அதற்கு பொறுப்பான ஆட்களை இங்கு ஆஜர் படுத்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை வந்தது. ரவிச்சந்திரன் என்பவர் இறந்ததால், உலக தமிழ் பண்பாட்டு இயக்கம் UK பெயரை பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் ஒரு வழக்கு ஒன்று தொடங்கப்பட்டு ஆறு வருடங்களாய் கிடப்பில் உள்ளதால், அந்த வழக்கை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஒப்புதல் அளிப்பது .

- Dr பூலோகநாதன் பேசுகையில்,
  Oxford பல்கலைக்கழத்தின் வரலாற்று மையத்துடன் இணைந்து உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தமிழ் பல்கலைக்கழகம் ஏற்கனவே இருக்கும் கட்டிடங்களில்(Building) தொடங்கலாம் ஜனவரி தைப்பொங்கலுக்கு Jaffna வில் introductory meeting நடத்தலாம். வசந்தகுமாரை secretary ஆக செயல்படுவார்.
  இதற்கு இளஞ்செழியன் பாலசுப்பிரமணியம் நிலாவுடன் சேர்ந்து கூட்டங்களை ஒருங்கிணைப்பதை கவனிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

- கனடாவில் இருந்து சுபாஷ் பேசுகையில்  வருகிற வருடம் கனடாவில் நடக்கும் மாநாட்டிற்கு அவரால் முடிந்த பங்களிப்பை தருவதாக கூறினார்.

- செழியன் பேசுகையில்,1974ல் இந்த இயக்கம் தொடங்குவதற்கு மூலகாரணமாய் இருந்த திரு.வீரப்பன் அவர்களுடைய மகள் தான் பொன்னி வீரப்பன். இவரை 2025 கனடாவில் நடக்கவிருக்கும் மாநாட்டில் கவுரவிக்க உள்ளோம். மலேசியாவில் டிசம்பர் 7,8 ல் நடக்கவிருக்கும் மாநாட்டிற்கு திரு சண்முகம் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டிக் கொண்டார் என்று தெரிவித்தார். இதற்கு திருமதி பொன்னி வீரப்பனும் ஒன்றாக இணைந்து வேலை செய்வோம் என்று கூறினார்.

- தேவகுமாரன், பிரான்ஸ் பேசுகையில், 1974ல் இருந்து இயக்கத்தில் இருப்பதாகவும், தலைவர் வீரப்பனை பலமுறை சந்தித்து பேசியதாகவும் கூறினார். மேலும் பலபேர் முன்பு ஐரோப்பாவில் பதவிக்காக வந்தார்கள் தவிர வேலை செய்யவில்லை என்றார். மேலும் 1977 சிறப்பான மாநாட்டில் கலந்துகொண்டதாகவும், கலைஞர் மற்றும் MGR அவர்களை சந்தித்து பேசியதாகவும் கூறினார். யுனெஸ்கோவில் நமது இயக்கத்தை சேர்ந்தவர் உறுப்பினராக இருப்பது மிக முக்கியம். அதற்கு  எல்லா கிளைகளில் இருந்தும் கடிதம் வர வேண்டும் என்று யுனெஸ்கோவில் சொல்கின்றனர். அதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார். அதோடு இயக்கில் அனைவரும் எப்போதும் தொடர்பில் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

- டாக்டர் பூலோகநாதன் அவர்கள் யுனெஸ்கோவில் உறுப்பினர் ஆவது முக்கியமான நல்ல விடயம் என்றும், தனது 6 மாடி கட்டிடங்களை இயக்கத்திற்கு அர்பணிப்பதாகவும் கூறினார்.மேலும் வசந்தகுமாரான், தங்களுடைய Secretary, French Nationality என்றும், இந்த

கட்டிடத்தை உலக தமிழ் பண்பாட்டு மைய அலுவலகமாக பதிவு செய்ய வேண்டும் என்றும், பாண்டிச்சேரியில் இருந்து ஆதரவுகள் இருக்கிறது என்றும், ஜனவரி க்கு முன்பு பிரான்சில் ஒரு அலுவலகம் இருக்கும் என்றும் இந்த ஆறு மாடி சொந்த கட்டிடத்தை மகிழ்ச்சியுடன் தருவதாகவும், நிரந்தரமாக பாவித்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார். தான் ஆஸ்திரேலியாவில் இருந்து வந்தவுடன் வசந்தகுமாருடன் சேர்ந்து பிரான்ஸ்க்கு சென்று இதை செய்யலாம் என்றும் கூறினார். மைக்கேல் காலின்ஸிடம் இதை பற்றி கூறி இருப்பதாகவும் கூறினார்.

- டாக்டர் புவினாதன் திரு செழியனுக்கு நல்ல முறையில் நடத்தியதற்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். புதிய தலைவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு மேலும் தங்களால் முயன்ற உதவிகளை செய்வதாகவும் கூறினார்.

- விமலதாஸ் பேசுகையில் கனடாவில் நடக்கவிருக்கும் மாநாட்டில் யுனெஸ்கோ விடயம் பற்றி விவரிக்க வேண்டும். யுனெஸ்கோவில் இணைவதில் பயன்கள் என்னவென்று தெரியப்படுத்த வேண்டும். தமிழர் பண்பாட்டை அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்ல சிந்தனைகளையும் முடிந்த முயற்சிகளையும் செய்ய வேண்டும், இல்லையெனில் அது இருண்ட நிலையாகிவிடும் என்று தெரிவித்தார். மேலும் தமிழர் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்ல மொழி ஒன்று தான் ஊடகம் என்றும், தமிழ் வழிக் கல்வி அவசியம் என்றும் கூறினார்.

- Prof நீலமேகம் பேசுகையில், அவர் புதுவையில் பிறந்ததாகவும், 35 வருடமாக ரிவுனியன் தீவில் இருப்பதாகவும், புதுவையில் குருகுலம் என்ற ஒரு தமிழ் பள்ளிக்கூடம் நிறுவி நடத்துவதாகவும், அதில் எதிர்கால சந்ததியர்க்கு நமது கருத்துக்களை கொண்டு செல்லவது தான் தனது முழு எண்ணமும் அபிப்பிராயமும் என்றும், "சமய வழிபாடு" என்ற பெயரில் 600 பக்கங்களை கொண்ட ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டிருப்பதாகவும், தமிழருடைய பாரம்பரிய வாழ்க்கை கலை என்ற ஒரு புத்தகத்தை பிரெஞ்சு மொழியில் எழுதுவதாகவும், தமிழ் வளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் தன்னால் முடிந்த உதவிகளை தொடர்ந்து செய்து கொண்டிருப்பதாகவும், கடந்த இரண்டு வருடமாகத் தான் நமது இயக்கத்தை பற்றி தெரிந்து கொண்டதாகவும், கவர்ந்ததாகவும் , இயக்கித்தில் தொடர்கிறேன் என்றும், பல நாடுகளுக்கு சென்று கருத்துக்களை எடுத்துரைத்துள்ளதாகவும் கூறினார்.

- சரவணபெருமாள், சுவிஸ் பேசுகையில், அவரால் முடிந்த தேவையான உதவிகளை செய்ய காத்திருப்பதாகவும், தமிழ் வளர்ச்சிக்கும், பண்பாடு கலாச்சாரம் சார்ந்த அனைத்து விடயத்திற்கும் தங்களால் இயன்றதை முன் நின்று செய்வதாக கூறினார்.

- டாக்டர் சுமதி லக்ஷ்மணன் IMTC UK வில் புதிதாக சேர்ந்து இருப்பதாகவும் Northern Development Council  Project பற்றியும் கூறினார்.

- குமரன் வேலு, பேசுகையில், மலேசியாவில் 120 தமிழ் சார்ந்த இயக்கங்களின் பேரவையுடைய செயலாளராக இருப்பதாகவும், தமிழ் மொழிக்கும் தமிழ் கல்விக்கும் ஒரு சவால் இருப்பதாகவும், மக்களுக்கு தமிழ் மொழியின் மீது ஆர்வம் குறைந்து கற்றுக் கொள்ளும் மனப்போக்கும் குறைந்து வருவதாகவும், அவர் மலேசியாவில் அமைச்சரின் கீழ் பணி புரிந்த போது "தமிழ் மொழி காப்பகம்"  என்ற ஒரு அரசாங்க இயக்கத்தை தொடங்கி நடத்தியதாகவும், நம்முடைய imtc, மலேசியாவில் தமிழ் மொழி கல்வி, பள்ளியில் அல்லாமல் வெளியிலும் கற்றுக் கொள்வது, மற்ற நாடுகளில் உள்ள தமிழ் சார்ந்த பள்ளிகளுடன் இணைவதற்கு உதவி செய்யுமா என்று கேள்வி எழுப்பினார். இதற்கு டாக்டர் பூலோகநாதன், பலநாடுகளில் உள்ள IMTC ஒன்றாக இணைப்பது தான் இந்த கூட்டத்தின் முதல் நோக்கமாகும் என்றும், தை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் தொடங்கலாம் என்றும், உலகில் உள்ள எல்லா நாடுகளில் உள்ள தமிழர்களுடன் சேர்ந்து இதை செய்வோம் என்று கூறினார்.

- செயலாளர் நிலா அவர்கள், தாழ்மையான வணக்கங்களையும், கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்களை பதிவு செய்த அனைவருக்கும் நன்றிகளை கூறினார்.